# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2361/06 - 2023 දෙසැම්බර් මස 04 වැනි සඳුදා - 2023.12.04

*2361/06 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 04 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*21 ஆம் பிரிவுடனும் 139 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, இக்கட்டளை மூலம் சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக் கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றாகக் கருதப்படுகின்றதும், இலங்கை, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பீடங்களையும் துறைகளையும் குறித்துரைக்கின்றதும் (2023, பெப்புருவரி 13 ஆந் திகதிய 2319/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதும்) 2006, யூன் 9 ஆந் திகதிய 1448/27 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை பின்வருமாறு திருத்துகின்றேன்.*

(1) அவ்வட்டவணையின் நிரல் I இல் காணப்படுகின்ற "சுதேச மருத்துவ பீடம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சுதேச மருத்துவ பீடம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அவ்வட்டவணையின் நிரல் II இல் காணப்படுகின்ற விடயம் "6. மௌலிக சித்தாந்த மற்றும் ஷரீர விஞ்ஞானத்துறை (அடிப்படைக் கோட்பாடுகள், ஆயுர்வேத உடற்கூற்றியல் மற்றும் உடலியங்கியல்)" என்னும் விடயத்துக்குப் பதிலாக "6. மௌலிக சித்தாந்த மற்றும் ஷரீர விஞ்ஞானத்துறை (அடிப்படைக் கோட்பாடுகள், ஆயுர்வேத உடற்கூற்றியல் மற்றும் உடலியங்கியல்)" என்னும் விடயத்தை இடுவதன் மூலமும்.".

கலாநிதி **சுரேன் ராகவன்**,
உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்.

கொழும்பு,
*2023, நவெம்பர் 30.*

EOG *12-0042*


1A - PG 6547 — 457 (2023/12) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*